

# மாயவலை

பா.ராகவன்

செப்டெம்பர் 11, 2001. இருபத்தியோராம் நூற்றாண்டு முடிகிற வரைக்கும் இதுவரை, இனிமேல் எந்த ஊரில், எந்தத் தீவிரவாத இயக்கம், என்ன நாசகாரியம் புரிந்தாலும் அதன் ரிஷி மூலத்தில் ஏதோ ஒரு வகையில் இந்தத் தேதி சம்பந்தப்பட்டுத்தான் இருக்கும். அமெரிக்கா எதிர்பாராத வகையில் அல் காயிதா நிகழ்த்திய ஆகாய விமானத் தாக்குதல்கள். பலமுறை பேசி நமக்கே போரடித்துவிட்டது இல்லையா? ரொம்பப் பேசவேண்டாம். இப்போது நாம் பார்க்கப் போகிற லஷ்கர் இ தொய்பாவின் ஆகப்பெரிய தாக்குதல் திட்டமான டிசம்பர் 13, 2001 இந்திய நாடாளுமன்ற வளாகத் தாக்குதலுக்கும் பிள்ளையார் சுழி, முதல் வரிச் சம்பவம் தான் என்பதை மட்டும் அறிந்துகொண்டு மேலே ஓடிவிடுவோம்.

செப்டெம்பர் 11-க்கும் டிசம்பர் 13-க்கும் அதிக இடைவெளி இல்லை. சுமார் இரண்டரை மாதங்கள். அதற்குள் யோசித்து, ஸ்கிரிப்ட் எழுதி, ஒத்திகை பார்த்து, அவுட்டோர் யூனிட்டுக்குச் சொல்லி, காஷ்மீரில் சில ப்ரொடக்ஷன் மேனேஜர்களை ஏற்பாடு செய்து, ஷூட்டிங் தேதியை டிசம்பர் 13 என்று நிர்ணயித்துவிட்டது லஷ்கர்.

அத்தனையும் கடவுளுக்கும் தெரியாத ரகசியமாகச் செய்யப்பட்டது என்பதுதான் இதில் மிக முக்கியம். ஏனெனில், அல் காயிதா தாக்குதல் சம்பவம், அதையடுத்த அமெரிக்கப் படையெடுப்பு என்று உலகம் அதிரடிகளால் சூழப்பட்டிருந்த நேரம் அது. எல்லா தேசங்களுமே உள்நாட்டுப் பாதுகாப்பைக் கணிசமாக பலப்படுத்தியிருந்தன. இந்தியாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பக்கத்து பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு சப்போர்ட் பண்ணுவதாக அறிவித்துவிட, அம்பயர் மாதிரி நடுநிலை காக்கிறேன் பேர்வழி என்று வாஜ்பாயி சொல்லிவிட்டார்.

ஆனாலும் பாதுகாப்பு பந்தோபஸ்துகள் முக்கியமல்லவா? காவல் துறையும் ராணுவமும் தேசம் முழுவதும் அப்போது தீவிரமான ரோந்துப் பணிகளில்தான் இருந்தன. எல்லா இடங்களிலும் எத்தனையோ பேர் சந்தேக கேஸில் கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் உளவுத்துறை தன் கண்களை அகல விரித்துக்கொண்டு ஆகாசம் முதல் அத்திப்பட்டு, ஆகாசம்பட்டு கிராமங்கள் வரை வேவு பார்த்துக்கொண்டிருந்தது. எங்கும் செக்யூரிடி. எதிலும் செக்யூரிடி. டைட் செக்யூரிடி.

லஷ்கருக்கு இது தெரியாதா? ஆனாலும் பரவாயில்லை என்றுதான் அவர்கள் நாடாளுமன்ற வளாகத்திலேயே தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார்கள். இதற்குப் பல காரணங்கள். முதலாவது, இந்தியாவின் ரத்தத்தை உறைய வைக்கும். இரண்டாவது, உலகையே வெலவெலக்கச் செய்யும். மூன்றாவது, பாகிஸ்தான் அரசு ரகசியமாக நிறைய ஆசீர்வாதம் செய்யும். நான்காவது, தெற்காசியாவின் தன்னிகரற்ற இயக்கம் என்கிற பெயர் லஷ்கருக்குக் கிடைக்கும்.

ஆகவே திட்டமிட்டு, கவனமாகக் களமிறங்கினார்கள்.

ஒரு போர்க்களத்துக்குப் போகிற வீரர்கள் மாதிரி சகல ஆயுதங்களையும் உணவுப்

பொருள்களையும் (உலர்ந்த பழங்கள்) மொபைல் போன், ஐடெண்ட்டி கார்டு போன்ற அடையாளப் பொருள்களையும் எடுத்துக் கொண்டுதான் கிளம்பினார்கள்.

திட்டம் சற்று நுணுக்கமானது. நாடாளுமன்றக் கட்டட வளாகத்துக்குள் சகட்டுமேனிக்கு யாரும் நுழைந்துவிட முடியாது. அனுமதி பாஸ் இருந்தால் மட்டுமே வாகனங்களுக்குக் கதவு திறக்கப்படும். தவிரவும், அப்போது குளிர்காலக் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருந்தது. குளிருக்கு இதமாக உள்ளே பா.ஜ.க. -காங்கிரஸ் மோதல் கன ஜோராக சுடச்சுட நடந்து கொண்டிருந்தது. சுற்றுலாப் பயணிகள் கூட, தூர இருந்து தரிசித்துவிட்டுப் போகவேண்டியதுதான்.

லஷ்கர் ஆட்களின் நோக்கம் இரண்டு. வாஜ்பாயி, அத்வானி போன்ற தலைவர்கள் யாராவது அகப்பட்டால் சுட்டுக் கொல்வது முதலாவது. அதன்பின் கட்டடத்தையே வெடிவைத்துத் தகர்ப்பது.

அதற்குத் தேவையான வெடிபொருள்கள் அனைத்தையும் முன்னதாக பத்திரமாக ஒரு வெள்ளை நிற அம்பாசிடர் காரில் ஏற்றி வைத்திருந்தார்கள். அந்தக் காரில்தான் அவர்களும் வந்தார்கள்.

தோரண வாயில் காப்போன் கதவு திறப்பதற்கு என்ன வழி? ம்ஹூம். ஒரு வழியும் இல்லை. கதவு திறந்திருந்தால் நேரே உள்ளே ஓட்டிப் போய்விடுவது. திறந்திராத பட்சத்தில் இடித்து உடைத்தபடி உள்ளே போய்விடுவது. காருக்குள் இருப்பதால் ஒன்றும் பிரச்னையில்லை. அதுவும் ஒருவரல்ல; ஐந்து பேர். தவிரவும் கார் நிறைய கிரேனேடுகளும் வெடி மருந்துகளும் இருக்கின்றன. ஏ.கே. ரகத் துப்பாக்கிகள் வேறு பொண கனத்துடன் காலுக்கடியில் கிடக்கின்றன. என்ன பயம்? ஒன்றுமில்லை.

அன்றைக்கு வியாழக்கிழமை. டிசம்பர் மாதத்து டில்லி குளிரைப் பற்றி விவரிக்கவே வேண்டாம். மணி பதினொன்றரை ஆகியும் வானம் மப்பும் மந்தாரமுமாகவே இருந்தது. ஸ்வெட்டர் அணிந்து மஃப்ளர் சுற்றிய நாடாளுமன்ற செக்யூரிடிகள் தம் வழக்கப்படி ரோந்தில் இருந்தார்கள். சுற்றியுள்ள பூங்காவை அழகுபடுத்தும் தொழிலாளி ஒருவர் கத்திரியும் கையுமாக ஏதோ உத்தியோகம் பார்த்துகொண்டிருந்தார். சபை ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. இதெல்லாம் வழக்கம்தான். ஒத்தி வைக்காமல் ஒழுங்காக நடந்தால்தான் அதிசயம். அமைச்சர்களும் எம்.பிக்களும் இன்னும் சில நிமிடங்களில் வெளியேறி, அவரவர் வாகனங்களில் புறப்பட்டுவிடுவார்கள். அரைமணி நேர களேபரம். அப்புறம் அந்தக் கட்டடம் சமர்த்தாக இருக்கும். மோப்ப நாய் கொண்டு இன்னொரு ரவுண்டு ரோந்து போய் வந்துவிட்டால் மறுநாள் ஒத்தி வைக்க சௌகரியமாக இருக்கும்.

சரியாகப் பதினொன்றரை ஆனது. அந்த வெள்ளை அம்பாசிடர் வேகமாக சீறிக்கொண்டு வந்தது. எம்.பி.க்களுக்காகத் திறந்து வைத்திருந்த கேட்டினுள்ளே அநாயாசமாக நுழைந்து மேலும் வேகமெடுத்தது.

'டாய், யாரு? யாரு? நில்லு.. நிறுத்து காரை!' என்று ஹிந்தியில் அலறியபடி செக்யூரிடி ஒருவர் துப்பாக்கியைத் தூக்கியபடி ஓடினார்.

காரின் முன்பக்கக் கண்ணாடியின்மேல் முழ நீளத்துக்கு என்னவோ ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்ததை முதலில் யாரும் அத்தனை பொருட்படுத்தவில்லை. அப்புறம் எல்லாம் முடிந்தபிறகுதான் படித்துப் பார்த்தார்கள். நாம் இப்போதே படித்துவிடலாம். ரொம்ப காமெடியான பட்லர் இங்கிலீஷில் எழுதப்பட்ட ஸ்டிக்கர் அது. புரிந்துகொள்ளப் பெரிய ஆங்கில அறிவெல்லாம் வேண்டாம். ஏ ஃபார் ஆப்பிள் தெரியுமல்லவா? போதும்!

"INDIA IS A VERY BAD COUNTRY AND WE HATE INDIA. WE WANT TO DESTROY INDIA AND WITH THE GRACE OF GOD WE WILL DO IT. GOD IS WITH US AND WE WILL TRY OUR BEST. THIS EDIET WAJPAI AND ADVANI WE WILL KILL

THEM. THEY HAVE KILLED MANY INNOCENT PEOPLE AND THEY ARE VERY BAD PERSONS. THERE BROTHER BUSH IS ALSO A VERY BAD PERSON HE WILL BE NEXT TARGET. HE IS ALSO THE KILLER OF INNOCENT PEOPLE. HE HAVE TO DIE AND WE WILL DO IT."

இத்தனை நீள எழுத்துக்களைக் கொண்டு ஒரு ஸ்டிக்கர் செய்து காரின் முன் கண்ணாடியில் ஒட்டிவிட்டு அந்த பிரகஸ்பதி எப்படித்தான் வண்டி ஓட்டிக்கொண்டு வந்தானோ தெரியவில்லை. வாஜ்பாய் அல்லது அத்வானியின் வண்டிக்குக் குறிவைத்து வந்திருக்க வேண்டும். அவர்களுக்கு எதிரே முதல் முதலில் அகப்பட்டது துணை அதிபர் பைரோன் சிங் ஷெகாவத்தின் கார்தான்.

போய் மோதி வெடிக்கச் செய்யும் உத்தேசத்துடன் வண்டியை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். எல்லாம் கண நேரம். நாலாபுறங்களிலிருந்தும் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொண்டே ஓடிவர, மோதல் திட்டம் வீணாகிவிடும் என்று புரிந்த தீவிரர்கள், சடாரென்று காரை நிறுத்திவிட்டுக் குதித்து ஓடத் தொடங்கினார்கள். ஆளுக்கொரு பக்கம். ஏ.கே. 47 உடன். தவிரவும் பாக்கெட்டுகளில் கிரானேடுகள் இருக்கின்றன.

தாக்குதல் ஆரம்பமானது. மணி 11.40. அத்தனை பெரிய நாடாளுமன்ற வெளிவராண்டாவில் பதுங்கவா முடியாது? ஏறிப் பதுங்கிவிட்டார்கள். பாதுகாப்பு வீரர்களை நோக்கி லஷ்கர் ஆட்கள் சுடவும், அவர்களை நோக்கி வீரர்கள் சுடவும், சில நிமிடங்களில் பிராந்தியம் உண்மையிலேயே ஒரு போர்க்களமாகிப் போனது.

குளிர்காலக் கூட்டத்தொடரைப் படமெடுக்க வந்த மீடியா கேமராமேன்கள் குண்டு படமுடியாத இடங்களில் கேமராக்களை நிறுத்தி ஷூட்டிங்கை ஷூட் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

என்ன நடக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை. பதற்றமும் பயமும் கலவரமும் இரு தரப்புக்கும் பொதுவாக இருந்தது. சடார் சடாரென்று குண்டடி பட்டு யார் விழுந்தாலும் எல்லோருக்கும் நெஞ்சு பதைத்தது.

விபரீதம். மிகப்பெரிய விபரீதம். உள்ளே வாஜ்பாயி இருக்கிறார். அத்வானி இருக்கிறார். எதிர்க்கட்சி எம்.பிக்கள், அமைச்சர்களில் சிலர், பத்திரிகையாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என்று சுமார் இருநூறு பேருக்குக் குறையாமல் இருந்தார்கள். நடந்துகொண்டிருப்பது மாபெரும் அசம்பாவிதம். இது பரிணாம வளர்ச்சி பெற்றுவிட்டால் அத்தனை பேரும் காலி.

உடனடியாக உள்ளே அனைத்துக் கதவுகளும் இழுத்துப் பூட்டப்பட்டன. உள்ளிருந்த பாதுகாவலர்கள் தத்தம் துப்பாக்கிகளை ரவைகளால் நிரப்பிக்கொண்டார்கள். தலைவர்கள், வி.ஐ.பிக்களை அலேக்காகத் தூக்கிப் போய் ரகசியமான இடங்களில் மூட்டை கட்டிப் போட்டார்கள். எல்லாம் முடியும்வரை யாரும் எழுந்து வரவேண்டாம்.

அங்கே அறிவிக்கப்படாத எமர்ஜென்சி சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புத் துறை அமைச்சராக அப்போது இருந்த ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், வெளியில் நடப்பதை அறிந்துகொள்ள விரும்பினார். ஆனால் காவலர்கள் அவரை வெளியே வர அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்.

'வருவது நல்லதில்லை ஐயா. துப்பாக்கிச் சூடு நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு காரில் வந்தார்கள். மொத்தம் ஐந்து பேர். வளாகத்துக்குள் பதுங்கிக்கொண்டு சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்கிருந்து குண்டு பாயும் என்று இப்போது சொல்லவே முடியாது!'

'அப்படியா? இழப்புகள் ஏதும்?'

'உண்டு. இன்னும் முழு விவரம் தெரியவில்லை. ஆ, சத்தம் கேட்கிறதா? இன்னும் தொடர்கிறது. நீங்கள் இங்கேயே இருக்கவும். வெளியே வர முயற்சி செய்யவேண்டாம்.'

அந்த செக்யூரிடி தன் ஆயுதத்துடன் கதவைத் திறந்து வெளியேறி, படாரென்று மூடித் தாழிடும் சத்தம் கேட்டது. ஆனால் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸும் அப்போதைய சட்ட அமைச்சர் அருண் ஜெய்ட்லியும் நடப்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள மிகவும் விரும்பியிருக்கிறார்கள். உயிராவது புண்ணாக்காவது? என்ன செய்தார்கள், எப்படிப் பார்த்தார்கள், அல்லது பார்க்க முடிந்ததா என்று தெரியவில்லை.

ஆனால் லஷ்கர் போராளிகள் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் ஜெலட்டின் குச்சிகளை வீச முயற்சி செய்கிறார்கள் என்கிற தகவலை முதலில் வெளிப்படுத்தி, செக்யூரிடிகளை எச்சரித்தது அவர்கள்தான்.

ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. அவர்கள் பதுங்கியிருந்த இடம் நாடாளுமன்றத்தின் பிரதான வாயில் இல்லை. பின்புறம். குச்சிகள் வந்து மோதியதோ, அதன் அடியிலிருந்த பூந்தொட்டிகளின் மீது.

சுமார் நாற்பது நிமிடங்கள் இந்தச் சண்டை நீடித்தது. டெக்னாலஜியின் தயவில் தேசமே டி.வி.யில் நகம் கடித்துக்கொண்டு பார்த்தது. சண்டை முடிந்து பிணங்களை அப்புறப்படுத்தும்போது அவர்கள் ஐந்து பேரும் கொல்லப்பட்டிருந்தார்கள். அடையாள அட்டைகளைக் கொண்டு லஷ்கர் மற்றும் ஜெய்ஷ் ஏ முஹம்மது இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தது. டெல்லி போலீஸ்காரர்கள் ஐந்து பேர் மற்றும் அந்த அப்பாவி தோட்டத் தொழிலாளியும் இறந்திருந்தார்கள்.

அதற்குள் ராணுவத்துக்குத் தகவல் போய் லாரிகளில் வந்து இறங்க, மறுபுறம் கறுப்புப் பூனைப் படை ஒன்று வந்து குதிக்க, பிராந்தியமே களேபரமாகிவிட்டது. அமைச்சர்களும் பிரதமரும் எம்.பிக்களும் சபாநாயகரும் மற்றவர்களும் நலமாக இருக்கிறார்களா என்று எல்லா கதவுகளையும் தள்ளிக்கொண்டு ஓடோடிப் போய்த் தேடினார்கள்.

அத்தனை பேரும் அரண்டுதான் போயிருந்தார்கள்.